# தமிழ்மொழிச் சிறப்பு.

*(To be read on 4th & 5th May 1935)*

on the Anniversary day of

**SRI**

**VAITHIYALINGA DESIKA FREE READING ROOM,**

**TIRUVARUR.**

BY

துடிசை கிழார்

ரபல ஆப்காரி க்ண்டிராக்டரும், முனிஸிபல் கவுன்சிலருமான திருவாளர் ம. அ. ஆறுமுக நாடார் அவர்களுடைய பொருளுதவிகொண்டு அச்சிடப்பெற்றது.

Karunanidi Press, Vijayapuram 35

உ

# தமிழ்மொழிச் சிறப்பு.

## தமிழ்த்தாய் வாழ்த்து.

பைந்தமிழ்த் தேவியின் பாத மலரிணை
நந்தலை புனைகுதூ உம் நலம்பெறற் பொருட்டே.

## தமிழ் சிறந்ததென்பது.

உலகத்தில் இதுவரை வழங்கப்பட்டுவந்த மொழிகளுள்ளும் இப்போது வழங்கப்படுகின்ற மொழிகளுள்ளும் சிறந்தது தமிழே.

உலகத்தில் இதுவரை வழங்கப்பட்டு வந்த மொழிகளுள் தமிழ்மொழி சிறந்த தென்பது கூறாமலே அமையும். ஏனென்றால்: அம்மொழிகள் எல்லாம் வழக்கு வீழ்ந்து ஒழிந்தமையும், அவ்வாறு ஒழியாமல், அம்மொழிகளுக் கெல்லாம் முந்தினதாயிருந்தும், தமிழ்மொழி வழக்கத்தில் இன்னும் நின்று நிலவுவதே சான்று.

சிறப்புடைய மொழி ஒருகாலத்தும் வழக்குவீழ்ந்தொழியாது. வழக்குவீழ்ந்தொழிந்தால் அது சிறப்புடைய மொழி ஆகாது.

இப்போது வழங்கப்படுகின்ற மொழிகளுள் தமிழ் மொழி சிறந்ததென்பதற்குப் பல அடையாளங்கள் உள. அவைகளில் முக்கியமானவை:—

(1) தொன்மை, (2) இனிமை, (3) இயற்கை அமைவு, (4) இலக்கண வரம்பு (5) எளிமை, (6) எழுத்துண்மை, (7) மந்திரசக்தி—இவைகளைக்கொண்டு நடைபெறுகின்ற முறையே.

இனி, அவைகளை ஒவ்வொன்றாய் எடுத்துக்கொண்டு ஆராய்வாம்:—

## தொன்மை.

உலகம் என்று தோன்றிற்றோ அன்றே உடன் தோன்றியது தமிழ்மொழியாகும். இதனாலன்றோ ஒரு புலவர்.

"என்றுமுள தென்றமிழ் இயம்பி இசைகொண்டான்" என்றார்.

"என்றுமுள தென்றமிழ்" என்று இவர் கூறியதால் எதிர்மறை நியாயத்தால் "வடதமிழ் என்றும் இல்லாதது" என்று கொள்ளக்கிடக்கின்றது.

தமிழின் தொன்மையை அடியிற்கண்ட பாசுரம் வலியுறுத்தும்:—

"முன்னிகழ்ந்த பாலி மொழியுஞ் சீர்வாணமும்
துன்னும் கருப்பையிலே தோற்றுதற்கு—முன்னே
பண்டைகாலத்தே பரவைகொண்ட முன்னூழி
மண்டலத்தில் பேர் வளநாட்டின்—மண்டுநீர்
பேராற்றருகில் பிறங்கு மணிமலையில்
சீராற்றும் செங்கோ திறற்செங்கோ—நேராற்றும்
பேரவையிலே நூற்பெருமக்கள் சூழ்ந்தேத்தப்
பாரரசு செய்த தமிழ்ப் பைந்தேவி".

பாலியும்—கீர்வாண்மும் தோன்றுவதற்கு பல நூறாயிர ஆண்டுகளுக்கு முன்னரே, சீரிய நிலையில் உலகமெங்கும் புகழுடன் அரசுவீற்றிருந்தது நம் பைந்தமிழ் என்று நாம் தெரிகிறோம்.

இச்செங்கோவின் காலமானது திரிபுரதகனத்துக்கும்—சூரபன் மன் காலத்துக்கும் இடைப்பட்ட காலம். சூரபன்மன் காலம் இற்றைக்கு இலக்கம் வருடங்கள் முன்னென்பர் சரித்திரம் வல்லார்.

"திராவிடசிசு" என்று சங்கரரால் பாராட்டப்பெற்ற நமது தமிழ்க் குழந்தையாகிய திருஞானசம்பந்தரைப்பற்றி அறியாதார் ஒருவரும் இலர்.

அவர் மூன்றாண்டு நிரம்பிய இளம்பிராயத்திலேயே தமிழ் மறையாகிய முதல் மூன்று திருமுறைகளையும் வெளியிட்டார் என்பதும் எல்லோரும் அறிவர். அவர் எப்படி வெளியிட்டார்? எங்கிருந்து தெரிந்துகொண்டார்? என்பது அவருடைய திருவீழிமிழலைத் தேவாரப்பாசுரங்களைப் படித்தால் அறியலாம். Vide:-

உன்னிய அருமறை ஒலியிணை முறைமிகு பாடல்செய்
இன்னிசை அவருரை யெழிறிகழ் பொழில் விழிமிழலையை
மன்னிய புகலியுண் ஞானசம்பந்தன் வண்டமிழ்
சொன்னவர் துயரிலர் வியனுலகுறுகதி பெறுவரே.

நாத தத்துவத்தினின்றும் கேட்கும் அருமறை ஒலியினை முறைமிகு பாடல்களாகத்தான் செய்ததாக, பிற்காலத்தில் மக்கள் மயங்கா வண்ணம் சம்பந்தர் கூறியிருக்கின்றார்

ஆகையால், ஒடுக்க நிலையிலும் தமிழ்மொழியானது அழியாது ஒலி உருவமாக நின்று நிலவுகின்றது என்று தெரிகிறது. இதனை அறிந்தன்றோ கம்பர் "என்றுமுள தென்றமிழ்" என்றார்.

தமிழ் மொழியானது தத்துவங்கள் பிறக்கும்போதே பிறக்கின்றது. ஒடுங்கும்போது ஒடுங்கிநிற்கின்றது. என்றும் ஒரே படித்தாய்உள்ளது. பரம்பொருள் எப்படியோ அப்படியே தமிழ்மொழியும். இதனாலன்றோ நமது அருமைத் தத்துவபோதகர் திருவாளர் சுந்தரம் பிள்ளை அவர்கள்

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாள முந்துளுவும்
உன்னுதிரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே".

என்று கூறினர்.

தமிழ்மொழியில் ஓரெழுத் தொருமொழிகள் எண்ணிறந்தன. ஒரு பொருட்குப் பல சொற்கள் உள. இது ஒன்றே மொழியின் தொன்மையை விளக்குவதற்குப் போதுமானது.

பூமியிலும் கற்பாறைகளிலும் நாளாக நாளாகப் படைகள் (அடுக்குகள்) ஏற்படுவதுபோலவே, மொழியிலும் சொல் அடுக்குகள் ஏற்படுகின்றன. படைகளைக் கணக்கிட்டு பூதத்துவ நூற்பிரகாரம் கற்பாறைகளுக்குக் கால வரையறை கூறுவதுபோலவே சொல் அடுக்குகளைப் பார்த்தால் கால வரையறை கூறலாம். அந்த முறையிலும் தமிழ் மொழியானது தற்காலம் நின்று நிலவும் மொழிகளுள் தொன்மை வாய்ந்தது என்று அறிகிறோம்.

வழக்கு வீழ்ந்தொழியாமல் என்றும் ஒருபடித்தாயிருப்பதூஉம்,

பல மொழிகள் தன்னிடத்திருந்து உண்டாக இடந்தந்து அங்ஙனமே பல மொழிகளுக்குத் தாயா யிருப்பதூஉம்,

பல ஓரெழுத் தொருமொழிகளைத் தன்னிடத்தே கொண் டிருப்பதூஉம்,

ஒரு பொருட்குப் பல சொற்களைத் தன்னிடத்தே கொண்ட தூஉம்,

பிற மொழிகளின் துணையின்றி இயங்கவல்லதாயிருப்பதூ உம்,

தொன்மைக்கு அறிகுறிகளாம்.

## 2- இனிமை.

தமிழ்மொழியானது மிகவும் இனிமையானமொழி.

"பண்ணார் தமிழ்"

"சந்த மார் தமிழ்" —என்று

சமயாசாரியர்களால் புகழப்பெற்றது.

இனிமைக்கேற்பத் "தமிழ்" என்னும் பெயரைத் தனக்கே உடையது. vide—

"தமிழ் சிவம், இனிமை யெனும் தனிப் பொருளாம்."
(பேரிசைக்காரராகிய கழாரம்பர்.)

"இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்."
(பிங்கல முனிவர்)

தமிழ் மொழியானது தேனினு மினிய செஞ்சொற்களை யுடையது.

இன்னமுது, கனி, பாகு, கற்கண்டு, சீனி, தேன் முதலிய இனிய பதார்த்தங்களையும் கைக்கும்படி செய்வது தமிழ்.

"செவிக்குண விலாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப்படும்." —என்ற

பொய்யாமொழியாருடைய வாக்கைக் கவனித்தால் தமிழினுடைய இனிமை தெற்றென விளங்கும்.

ஒருவனுக்குப் பசிவந்தவிடத்து "மானங், குலங், கல்வி, வண்மை, அறிவுடைமை" என்ற பாசுரத்தில் கூறிய பத்துவகை குணங்களும் பறந்துபோம். அப்பேர்ப்பட்ட பசியை அடக்கி யாளும் சத்தி தமிழுக்கு உண்டென்றால் அதன் இனிமையை என்னென்று வியப்பது !

கூத்தப்பெருமான் தில்லையில் பொன்னம்பலத்தில் தெற்கு நோக்கி ஆனந்தத்தாண்டவம்புரிவது, தமிழ்மொழியைச் செவி யில் இனிமையாகக்கேட்கவும் அதனை அனுபவிக்கவும் அல்லவா என்றபொருளை அடக்கி ஒரு புலவர் "தமிழ் செவிமாந்தவும் அன்றோ" என்று பாடுவாரானால், மொழியின் இனிமையை விளம்பவும் வேண்டுங்கொல்.

மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன் உரைத்ததமிழ்
வரைந்தஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தெப்போது
தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
தொய்யசேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினறு
நளினந்தானே.

என்றபடி தமிழ்ப்பாடல்களை எழுதப்பட்ட சுவடியும் இனிக்கும், தொட்ட கையும் இனிக்கும். படித்த நாவும் இனிக்கும்,

தேனினு மினிய திருவாசகத்தை ஒருதரம் படித்தவர் தமி ழின் இனிமையை நன்குணர்ந்தவராவர் அதன் இனிமையை நோக்கி அன்றோ அதனைச் சிற்றம்பலமுடையார் கையால் எழுதி னார். திருக்கோவையார் என்னும் அமிழ்தினுமினிய அகப் பொருள் இலக்கியத்தைப் பாடும்படிசெய்தார்.

இத்தகைய இனிமைத் தன்மையை எம்மொழியிலுங் காண் டல் அரிது.

ஆகையால், தொன்மையும், இனிமையும்வாய்ந்த மொழி தமிழேயாகும்.

## 3. இயற்கை அமைவு.

தொன்மையும் இனிமையும் எப்படித் தமிழ் மொழிக்குச் சிறப்பாய் அமைந்துள்ளனவோ அப்படியே "இயற்கை அமை வும்" ஏற்பட்டிருக்கிறது.

தற்காலம் நின்று நிலவும் மொழிகளுள் தமிழ்மொழி ஒன்றனைத் தவிர மற்றவைகள் எல்லாம் செயற்கை மொழிகளே.

தமிழ் மொழி ஒன்றே இயற்கைமொழி. எப்படி எனில் கூறுதும்:—உலகத்தில் எந்தப் பிராணியும் வாய்திறந்தவுடன் உண்டாகும் ஓசை "அ" என்னும் ஒலியே.

"அ" என்பது இயற்கை ஒலி என்பது எல்லோருக்கும் ஒப்ப முடிந்ததே.

காகம் என்னும் பறவை ஒலிப்பது "கா" என்பது. இப் பறவை "கா—கா" என்று கூப்பிடுவதனாலேயே இதற்குக் கா-கா, காகாய்-காகம் என்று பெயர்.

ஆகையால் "கா" என்பதும் இயற்கை ஒலியேயாகும்.

ஊமைக்கோட்டான் ஒலிப்பது "ம்" என்னும் ஒலியாகும். இதுவும் இயற்கையே. ஆகையால் இயற்கை ஒலிகள் அ—க—ம் என மூன்றே என்று கண்டோம்.

பேசுவதற்குக் கருவியாயிருப்பது நாக்கு. நாக்கின் நுனி அண்ணத்தில் பட்ட உடனே உண்டாகும் ஒலி "ர" என்பதே. இது மனிதனுடைய முயற்சியினால் உண்டாகும் ஒலி. ஆகையால் "ர" என்பது செயற்கை ஒலியாகும்.

அ. க. ர. ம்

இயற்கை ஒலிகள் மூன்றும் செயற்கை ஒலி ஒன்றும் சேர்ந்து ஆக ஒலிகள் நான்காயின.

தமிழ் மொழியில் உள்ள மற்ற எழுத்துக்கள் எல்லாம் இந்த நான்கு ஒலிகளினின்றும் பிறந்தனவேயாகும்.

உதாரணமாக:—

| | | | | |
|---|---|---|---|---|
| அ | இருது | க | ர | ம் |
| ஆ | (நீட்டல்) | ங | ழ | ப் |
| இ | (இளித்தல்) | ச | ல | வ் |
| ஈ | (நீட்டல்) | ஞ | ள | ய் |
| உ | (குவித்தல்) | த | | |
| ஊ | (நீட்டல்) | ந | | |

எ (அ + இ)
ஏ (அ + ஈ)
ஐ (அ + ய்)
ஒ (அ + உ)
ஓ (அ + ஊ)
ஔ (அ + வ்)

உயிரெழுத்துக்களில் எப்படி நீட்டல், குவித்தல், இளித்தல் களினாலும் எழுத்துக்கள் ஒன்றோடொன்று புணர்வதினாலும் 12 உயிர்களும் உண்டாயினவோ, அப்படியே மெய்யெழுத்துக் களிலும், க—ர—ம் இவைகளிலிருந்து அவைகள் திரிந்த 11 மெய் யெழுத்துக்கள் உண்டாயின. மெய்கள் ஒன்றோடொன்று புணர் வதினால் மற்ற நான்கு எழுத்துக்களும் உண்டாயின உதாரண மாக:—

| | | | | |
|---|---|---|---|---|
| ள்+த | = | ட | = | (முட்டீது) |
| ள்+ந | = | ண | = | முண்ணன்று |
| ல்+த | = | ற | = | கற்றீது |
| ல்+ந | = | ன | = | கன்னன்று |

ஆகத்தமிழ்மொழியில் 12 உயிர்களும் 18 மெய்களும் இவ்வாறாக இயற்கையாக உண்டாயின.

அ. க. ம் என்ற மூன்று இயற்கை எழுத் துக்களினின்றுமே மற்றைய எழுத்துக்கள் பிறத்தலால் அ. க. ம். என்ற மூன்று எழுத்துக்களும் மற்ற எழுத்துக் களுக்கு இனமாயிற்று. அதனால் அம் மூன்று எழுத்துக்களுக் கும் அகம் + இனம் = அஃகேனம் என்று பெயர்:

எகு = எஃகு
இது = இஃது

என்றானவாறு அகம்=அஃகம் ஆயிற்று.

அஃகம் + இனம் — ஈற்றுமெய் கெட்டு அஃக+இனம், என ஆகி எடுத்தொலிப் புணர்ச்சி விதியின்படி அஃகேனம் என் றாயிற்று.

அஃகேனம் என்பது ஆய்தம். இந்த ஆய்த எழுத்தைத் தமிழ் மொழியில் உயிரெழுத்துக்களுக்கும் மெய்யெழுத்துக்க ளுக்கும் இடையில் சிங்க நோக்காக அமைத்திருப்பதை நோக்கி னால் அதன் உண்மை விளங்கும்.

தமிழ் நெடுங்கணக்கில் உள்ள மற்றய எழுத்துக்கள் உண்டாவதற்கு அ—க—ம் என்ற மூன்று இயற்கை எழுத்துக்களும் கருவியாக இருப்பதால் அவை மூன்றுக்கும் ஆயுதம் (ஆய்தம்) = கருவி என்று பெயர். ஆகையால், இயற்கை ஒலிகளினின்றும் பிறந்தது தமிழ் மொழி என்பது வெள்ளிடை மலையாம்.

இயற்கை ஒலிகளால் யாக்கப்பட்ட மொழி இயற்கை மொழி என்பது சொல்லாமலே அமையும்.

எழுத்தமைவு தமிழ்மொழிக்கு இருப்பதுபோல எம்மொழிகளிலும் காண்டல் அரிது. அதனை, மேலே எழுத்துக்களின் உற்பத்தியைக் காட்டிய முறையைக் கவனித்தால் தெளிவாகும்.

சொல்லமைவும் அப்படியே. தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரத்தை ஒருவன் வாசிப்பான் ஆனல், இவ் வமைவுகளை ஆண்டுப் பரக்கக் காணலாம்.

தமிழ்மொழிக்கு இலக்கண நூல்கள் பல. அவையாவன:
இயற்றமிழ்நூல்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெரு நூல் | by | பேராற்று நெடுந்துறையனர். |
| 2. | இயனூல் | by | இடைகழிச் செங்கோடனர். |
| 3. | மகேச சூத்திரம் | by | திரிபுரமெரித்த விரிசடை அரனர். |
| 4. | குமரம் | by | குன்றமெறிந்த குமரவேள். |
| 5. | அகத்தியம் | by | அகத்தியமுனிவர். |
| 6. | ஐந்திரம் | by | இந்திர முனிவர். |
| 7. | தொல்காப்பியம் | by | தொல்காப்பிய முனிவர். |
| 8. | காக்கைபாடினியம் | by | காக்கைபாடினியார். |
| 9. | நத்தத்தம் | by | நத்தத்தனர். |
| 10. | பன்னிரு படலம் | by | 12 மாணக்கர்கள் of Agasthiyar |
| 11. | தொன்னூல் | by | வீரமாமுனிவர். |
| 12. | நன்னூல் | by | பவணந்தி முனிவர். |
| 13. | வீரசோழியம் | | ... |

அவிநய இலக்கணம் 1. அவிநயம் by அவிநயர்.
தாள இலக்கணம் 1. தாள வகை ஒத்து.

## இசை இலக்கணம்.

1. பேரிசைச் சூத்திரம் கழாரம்பர்.
2. சிற்றிசைச் சூத்திரம் ,,
3. முது குருகு or பெருங்குருகு ,,
4. முது நாரை or பெருநாரை ,,
5. இசை நுணுக்கம் by சிகண்டி.

## நாடக இலக்கணம்.

1. செயிற்றியம் by செயிற்றியனர்.
2. குண நூல்
3. சயந்தம் by சயந்தன் S/o இந்திரன்.
4. முறுவல்
5. களரியா விரை

மேலே கூறிய இலக்கண நூல்கள் எல்லாம் எழுத்தமைவு—சொல்லமைவு—பொருளமைவு முதலியவைகளைப்பற்றிக் கூறுவதுடன், யாப்பு—அணி முதலியவைகளைப் பற்றியும் கூறுவன ஆகும்.

அகத்தியத்துக்கு முற்பட்ட இலக்கணங்களான குமரம்—மகேச சூத்திரம்—இயல்நூல்—பெருநூல் முதலிய இலக்கணங்களின் சிற்சில சூத்திரங்கள் மாத்திரம் ஆங்காங்கே இலக்கிய உரைகளில் காணப்படுகின்றன.

திரிபுராதிகள் காலத்துக்கும் சூரபன்மன் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆசியா—ஆஸ்திரேலியா—ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களில் ஒரே நிலப்பரப்பாய் இருந்தகாலத்தில் அவைகளை ஒரு குடைக்கீழ் ஆண்ட தனிப்பெரும் அரசனை சேங்கோன் என்பவன் காலத்தில் அவனுடைய தரைச் செலவை (படையெழுச்சியை) பற்றி தனியூர்ச் சேந்தன் என்னும் புலவன் பாடிய பாட்டுக்களாலும், அந்நூலின் உரையாலும் மேற்கோளாகக்காட்டப்பட்ட இயநூல், பெருநூல், குமரம்—மகேசசூத்திரம் முதலிய இலக்கண நூல்களின் சிற்சில சூத்திரங்கள் கிடைக்கின்றன.

அவ்விலக்கண நூல்களின் தொல்காப்பியம் அகத்தியம் முதலிய நூல்கள் இல்லாத பாவினங்களும் புணர்ச்சி விதிகளும் கூறப்பட்டிருக்கின்றன.

எடுத்தொலிப்புணர்ச்சி, குவித்தொலிப்புணர்ச்சி, நீட்டொலிப்புணர்ச்சி (அதாவது தீர்க்கசந்தி—குணசந்தி—விருத்தசந்தி) முதலிய புணர்ச்சி விதிகள் காணப்படுகின்றன.

இப்புணர்ச்சிவிதிகள் எல்லாம் தமிழ் உயிர் எழுத்துக்களிலேயே அமைந்துகிடக்கின்றதை உற்று நோக்குங்கள் :—

அ + அ = ஆ (நீட்டொலிப் புணர்ச்சி).
அ + இ = எ (எடுத்தொலிப் புணர்ச்சி).
அ + உ = ஒ (குவித்தொலிப் புணர்ச்சி).

ஆகையால், காலந்தோறும் இலக்கண நூலாசிரியர்கள் முன்னிருந்த இலக்கணங்களைத் தழுவி சில சூத்திரங்களை விட்டும், புதியனவாகிய சில சூத்திரங்களை உண்டுபண்ணிச் சேர்த்தும் நூல் செய்தார்கள் என்பது போதருகின்றது. இதனை

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகை யினன்றே."

என்ற சூத்திரத்தில் பவணந்தி முனிவர் விளக்கினர்.

மேலே குறிப்பிட்ட "செங்கோன் தரைச்செலவு" என்ற நூலாலும், நூலின் உரையாலும் பல பழைய சரித்திரங்கள் வெளியாகின்றன.

அக்காலத்தில் பெருவளநாட்டில் மூன்று கண்களையுடைய மனிதர்களைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. செங்கோன் முதலியவர்கள் மூன்று கண்களையுடையவர்கள். மிக உயரமானவர்கள்.

ஏகல் பிரொபசரும் "இழந்த லெமூரியா" என்னும் அவர் நூலில் இதே கருத்தை ஒட்டிக் கூறுகிறார். இந்து மகா சமுத்திரத்தில் உள்ள சில தீவுகளில் அகப்பட்ட எலும்புகளினால் அவர் அன்னணம் ஆராய்ந்து கூறுகிறார்.

மூன்று கண்களுடைய மனித வர்க்கம் கரிகாலன் காலம் வரை இருந்து பிறகு அழிபுற்றதாக ஏற்படுகிறது. பிரதாப உருத்திரன் என்பவன் மூன்று கண்களையுடையவனாக இருந்தான் என்பது சரித்திரம்.

கிரீஸ் தேசத்துக் கவியாகிய ஓமர் என்பவரும் தம்முடைய நூல்களாகிய 'இலியட்' 'ஒடெஸி' என்பவைகளில் முக்கண் மனிதர்களைப்பற்றிக் கூறுகிறார்.

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் சேங்கோனும், குன்ற மெரிந்த குமரவேளும் முக்கண்ணர்களே,

ஆகையால், பெருவளநாட்டில் ஆண்ட ஒளிநாட்டு வேளா ளர்கள் சாதாரணக் கண்களுடன் நெற்றிக்கண்ணையும் உடைய வர்களா யிருந்தார்கள் என்பது தெளிவாம்.

" மாடு கடவுளை வணங்கினால் அது தன்னைப்போன்ற உரு வத்தோடு கூடியதாகவேதான் கடவுளை வணங்கும்'' என்று விவேகாநந்தர் கூறியபடி, அக்காலத்தில் மனிதர்கள் மூன்று கண் களையுடையவர்களா யிருந்தமையால் அவர்களால் வணங்கப்பட்ட கடவுளர்களாகிய விநாயகர்—முருகர்—பரமேச்சுரர் முதலியவர்க ளும் மூன்று கண்களை உடையவர்களாய் இருக்கிறார்கள்.

இதனால், முற்காலத்தில் வணங்கப்பட்ட கடவுள் உருவங் களினின்றும் ஒரு முக்கியமான சரித்திரம் நமக்குக்கிடைக்கிறது.

இந்த மாதிரி அடையாளங்களிலிருந்து நாம் பல சரித்திரங் களை ஊகித்து அறிந்து கொள்ளலாம்.

தமிழ் நாட்டில் எழுத்தமைவு போலவே மற்ற அமைவுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

இதுகாறும் கூறியவாற்றால், தமிழ்மொழியானது இயற்கை மொழி என்றும், அம் மொழியின்கண்ணுள்ள இயற்கை ஒலிகள் நாவின் திறத்தால் அதாவது, எடுத்தல், படுத்தல், நலித்தல், நீட்டல், இளித்தல், குவித்தல் முதலிய காரணங்களால் செயற் கை ஒலிகளும், சேர்க்கை ஒலிகளும் உண்டாகின்றன என்றும், அவ்வொலிகள் ஒன்றன்பின் ஒன்றாக இயற்கைக்கு மாறுபடா வண்ணம் அமைக்கப்பட் டிருக்கின்றன என்றும், அவ்வியற்கை ஒலிகளுக்கு அஃகேனம் என்று பேர் ஏற்பட்டதென்றும், அஃ- கேனம் என்பதுதான் ஆய்தம் என்றும், அதற்குத் " தனிநிலை'' என்று ஓர் பெயர் உண்டென்றும், சேர்க்கை எழுத்துகளுக்கு விதிகள் இப்போதுள்ள இலக்கண நூல்களில் இல்லாதுபோன போதிலும் அகத்தியத்துக்கு முற்பட்ட இலக்கணங்களில் உண் டென்றும், இவ்விதமான இயற்கை அமைவு எம்மொழியிலும் காண்பதரிது என்றும் கூறியதாகும்.

## 4. இலக்கண வரம்பு.

தமிழ் மொழியானது தோன்மை, இனிமை, இயற்கை அமைவு இவ்வைகளை எப்படிச் சிறப்பாகப் பெற்றிருக்கின்றதோ, அப்படியே இலக்கண வரம்பும் பெற்றிருக்கின்றது.

தமிழ் மொழிபோல் ஏனைய மொழிகள் இலக்கண வரம்பு பெற்றவை அல்ல என்பது

கண்ணுடைப்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைப்பிற விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடப்படக் கிடக்கவும் படுமோ இயம்பீர்

என்ற பரஞ்சோதி முனிவர் பாசுரத்தால் அறியலாம்.

தமிழ் இலக்கணங்களின் எழுத்தமைவு, சொல்லமைவு, பொருளமைவு முதலியவைகளை நோக்கினல் பரஞ்சோதிமுனிவர் ஆராய்ந்துகூறினர் என்பது போதரும்.

தமிழ் இலக்கணமானது இலக்கியத்துக்கு வரம்புகட்டுவதோடு தத்துவ நூலுக்கும் வரம்புகட்டுகின்றது. தத்துவ முறையாய் நோக்கும்போது தமிழ் இலக்கணம் ஒரு தத்துவ நூலேயாகும்.

இலக்கண நூலில் கொடுத்திருக்கும் பேர்களைப்பாருங்கள் :-

உயிர் = ஆன்மா = Soul
மெய் = உடல் = Body
உயிர் மெய் = உடலுடன் கூடியஆன்மா = A living being.
வல்லினம் = ஆணவமலம் = Embodiment of arrogance.
மெல்லினம் = கன்மமலம் = Embodiment of temptation
இடையினம் = மாயாமலம் = Do. Illusion
புள்ளிமயங்கியல் or மெய்மயங்கியல் } Illusioning of the body or Tirimalakosa
உயிர் மயங்கியல் = Illusioning of souls or combination of Vowels.

பிறப்பியல் = Law of birth (Janma)
எடுத்தல் = படைத்தல் = Creation
படுத்தல் = அழித்தல் = Destruction
நலிதல் = அளித்தல் = Production

உடம்படுமெய்=வ and ய — The body that unites soul with soul or the form that anihilates births =பிறப்பை வேர் அறுக்கும் அருளுடம்பு.

வினை = கர்மா = Action
பிறவினை = Other's Karma = Transitive Verb
தன்வினை = One's own Karma—Intransitive Verb.
வினைஎச்சம்—Unfinished Karma—அனுபவியாத வினை
முற்றுவினை—Finished Karma.

குறிப்புவினை— } Un-known Karma
அறியாமற்செய்த வினை.

தெரிநிலை வினை—தெரிந்துசெய்யும் வினை—Known·karma = Declaration Verb

உடன்பாட்டுவினை—Affirmative Verb
விதிவினை—Un changeable Karma—மாறாக் கர்மம். பிராயச் சித்தங்களாலும் விலக்க முடியாத வினை.

எதிர்கால வினை — ஆகாமியம் — Present action — action done in this birth.

நிகழ்கால வினை—பிராரத்துவம்—Past action.
இறந்தகால வினை—சஞ்சிதம்—Acts done in several births and which are in store

வேற்றுமை — Inflection of nouns — Transformation or Transmigration according to Karma. மறுஜனனம்.

இதுகாறும் பதங்களைப்பற்றிக் கூறினும் இனி சூத்திரங்களுக்குப் போவோம்.

(i) "வேற்றுமைதானே ஏழெனமொழிப". இதுபிறப் பேழ் என்பதனைவலியுறுத்துகின்றது.

(ii) வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது நினையுங்காலை காலமோடு தோன்றும்."

The philosophic meaning is that Karma does not transform with the transmigration of souls but remains in tact and lies dorment waiting for the proper time according as the Karma is Akamiya&c

வினையானது மாறுபடாமல் உயிர் எந்த ஜென்மத்தை எடுத்த போதிலும் அந்தந்த ஜன்மத்தில் அந்தந்தக் காலத்தில் அவ்வுயிருக்குப் பலாபலனைத் தரும் என்பது போதருகின்றது.

இச்சூத்திரத்தால் ஒவ்வொரு வினைக்கும் ஒவ்வொருபக்குவ காலம் உண்டென்று தோன்றுகிறது. செய்த உடனே வினைகள் பலன் அளிக்காது அவ்வினை பழுத்தஉடனே பலன் அளிக்கும் செய்தவன் எந்தப்பிறவியில் இருந்த போதிலும் அவனை நேரே சென்று அடையும் என்பதும் வெளியாகின்றது

(iii) "மெய்யின் வழியது உயிர் தோன்றுநிலையே"
இதனுடைய சாதாரணப் பொருளைவிட்டு தத்துவநுண்பொருளைக் கவனியுங்கள் உதாரணமாக:—

ஊ என்ற உயிரை எடுத்துக்கொள்ளலாம் அது க் என்ற மெய்யில் சேர்ந்தால் கூ என்றாகும்.

அதே உயிர் ம் என்ற மெய்யில் சேர்ந்தால் மூ என்றாகும்.

உயிர் ஒன்றாயிருந்தும் மெய் வித்தியாசத்தால் கூ—மூ என்ற இரண்டு வித்தியாசமான எழுத்துக்கள் ஆயின. அதுபோல ஒரே உயிர் உடல் எடுக்கும் வித்தியாசத்தால் வெவ்வேறு இனமாக இருக்கும் கூ என்பதைக் குயிலாகவும் மூ என்பதைப் பூனையாகவும் வைத்துப்பாருங்கள் இரண்டு வித்தியாசமான பிறப்பாகின்றது.

இதனால், என்னதெரிந்து கொள்ளுகிறோமென்றால் ஒரே உயிர் பல ஜன்மங்கள் எடுக்கும் என்றும், உயிரானது எந்த சரீரத்தோடு கூடுகிறதோ அந்த சரீரத்துக்குத்தக்க குணத்தோடும் கூடியே இருக்கும் என்றும், மும்மலச் சேர்க்கையால் அமைந்த சரீரமானது உயிர்க்குணத்தை அடக்கிக்கொண்டு தன் மல சம்பந்தமான குணத்தை மேலிட்டுக்காட்டும் என்றும் தெரிந்து கொள்ளுகிறோம்.

"நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றே" என்ற பிரகாரம், தேகத்தியல்பால் உயிர்க்குணம் மாறுபடும். அதை அந்தவிதமாக மாறுபடாமல் உயிர்க்குணத்தோடு நிறுத்திக்கொள்ளுவதுதான் தவம் என்று சொல்லப்படும்.

ஐம்புலன்களின் வழியாய் மனதைச்செலுத்தாமல் உடற்குணத்தை அடக்கி உயிர்க்குணத்தை வளர்ப்பதுதான் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய காரியம்.

## 4. "மெய் உயிர் நீங்கிற் றன்னுருவாகும்."

இதன் பொருள்:—ஒரு உயிர் மெய்யினின்றும் நீங்கிவிட்டால் மெய் ஆனது தன்னுடைய பழைய உருவத்தை அடையும் என்பதே. உதாரணமாக:—"கா" என்னும் எழுத்தை எடுத்துக் கொள்ளுங்கள். க் + ஆ = கா.

"கா" என்னும் எழுத்திலுள்ள உயிரான "ஆ" என்னும் எழுத்துப் போய்விட்டால் "க்" என்று பழயபடி ஆய்விடுகின்றது. அது பேலவே கா என்பதைக் காகமாக வைத்துக் கொண்டால் அதனுடைய உயிர்போனதும் அதனுடைய உடலானது கீழேவிழுந்து ஐந்து பூதங்களாக மாறிவிடுவதைப் பார்க்கிறோம்.

அதுபோலவே, ஐந்து பூதங்களினால் ஆக்கப்பட்ட மனிதனுடைய உடலானது உயிர் நீங்கினதும், ஐந்து பூதங்களாக மாறிவிடுகின்றது. இது மாறுதலே ஒழிய நாசம் அன்று. மெழுகு வத்தி எரிந்தால் எப்படி உரு மாறினாலும் மெழுகுவத்தி நாசமடைவதில்லையோ, அப்படியே மனிதனுடைய உடம்பும் நாசமடைவதில்லை. மாறுதலே அடைகின்றது.

இதனால் உலகத்தார் அறிந்துகொள்ளவேண்டிய உயர்ந்த உண்மை என்னவென்றால், உயிரானது எப்போதும் ஒரே படித்தாய் மாறுதல் அடையாமல் இருக்கிறதென்பதூஉம், உடலானது ஐந்து பூதங்களால் ஆக்கப்பட்டதென்பதூஉம், உடலானது அழியும்போது ஐந்து பூதங்களாகவே மாறிவிடுகின்றதெனவும், அது நாசமடைவதில்லை என்பதூஉம், பசு பாச நித்தியத்தை (Indistructablity of matter) நிலைநாட்டுகிறதென்பதூஉம் முதலியன.

இப்படியே இலக்கண முழுமைக்கும் தத்துவப் பொருள் கூறலாம்.

ஆவணக் காப்பகம்

தமிழானது இலக்கண வரம்பு பெற்றது என்று தெரிந்து கொள்ள இவை போதும். இம்மாதிரியான இலக்கணநூலை எம்மொழியிலாயினும் கண்டதுண்டா? கூறுங்கள்.

பரஞ்சோதிமுனிவர் கூறிய கூற்றை இப்போது உற்று நோக்குங்கள்.

## 5. எளிமை.

தோன்மை—இனிமை—இயற்கை அமைப்பு — இலக்கண வரம்பு எப்படித் தமிழ் மொழிக்குச் சிறப்பாயுள்ளனவோ, அப்படியே எளிமையும் அம்மொழிக்குச் சிறப்பாய் உள்ளது.

தமிழ்மொழியைப்போல் எளிமையான மொழி வேறு எதுவும் இல்லை. நாவிற்கு மிகவும் எளிதானது பேசுவதற்கு மிகவும் ஏற்புடையது.

*Vide:*—

Mr. J. Knowels says, "A complete fauna of Nagari (sanskrit) types has up to 1000 different sorts. Looking as a sanskrit Grammar we find that over and above the primary letters, the medial vowel signs, Anuswara and other charecters, there are 215 conjunctions of two consonants, 136 conjunctions of three consonants, 27 conjunctions of four consonants and 6 of five consonants.

Then there are the multitudinous combina—tions of conjunct consonants with medial vowel signs. One way and another the combination of symbols for *14 vowels* and *33 simple consonants* amount up to a thousand different characters."

He deals similarly with Oriya, Hindi, Malay alam, Bangalle etc.

Then he states, " Now *there* is one *Vernacular* which, *Somehow Sometimes*, has *effected* a very considerable simplification.

The *Tamil Script* can be printed with *150* different conjunct consonant characters, a double consonant is just the same twice over, conjunct consonant is just the consonants are after the other without any change or form.

This has done away with the necessity of many hundreds of types for conjunct consonants and final letter forms. *Could the other Vernacular adopt the Tamil method?*

It is a fair call indeed from over 1000 to 150 types.

இவ்வாறு நோயல்ஸ் துரைமகனர் எல்லா மொழிகளையும் ஆராய்ந்தபின் கூறுவாரானுல் தமிழ்மொழிபோல் எளிமையானது வேறுண்டோ ?

நம் தமிழ்மொழியானது ஒலிகளைக் குறிக்க எழுத்துக்கள் இல்லாமல் தடுமாறவும் இல்லை. வட தமிழைப்போல் அளவுக்கு மிகுந்த வீண் எழுத்துக்களைப் புகுத்திக்கொண்டு திண்டாடவும் இல்லை.

தமிழ் மொழியில் எல்லாம் காரணப் பெயர்களே. காரணத்தைத்தெரிந்துகொண்டால் பதங்களை எளிதாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம்.

மற்ற மொழிகளில் இருப்பதுபோல் இடுகுறிப் பெயர்கள் தமிழில்கிடையா. இடுகுறிப்பெயர்கள் இருந்தால்மாத்திரம் நெட்டுருப்பண்ணவேண்டிவரும்.

தொல்காப்பியர் காலத்திலேயே சிலசொற்களின் காரணம் மறைந்துவிட்டன. அதனை "மொழிப்பெயர்க்கிளவி விழிப்பத் தோன்ரு" என்று கூறிவிட்டுப் போனர்.

இன்னெரு புலவர்.

"தமிழ்க்கே நாளும் தவம்செய் தூங்கு
அமிழ்தென உண்ணும் அரும் புலவீர்காள்!
ஒவ்வோர் சொல்லின் ஒளிர்முதனிலையைச்
செவ்வன மோரிற் றிகழுமக் காரணம்
வரையினைக் கல்வி மணிபெறல் எளிதாம்
உரையினைக் கல்வி உணர்வதோ அரிதே
மற்றது கல்வின் வறப்பினும் வறக்கும்
சொற்றெறும் காரணம் தோன்ருதிருந்தில
கல்வினை வல்லே கல்லுதலாகும்
சொல்லினைக் கல்லாப் பல்லவா நாள்கள்
பல்லவாயினும் படுபயன்
எல்லைஇல்லா இன்பமும் பெரிதே"

என்று கூறுவதைக் கவனித்தால் எல்லாச் சொற்களுக்கும் காரணம் கண்டுபிடிப்பது எளிது என்றும், அது தான் இன்பத்துக்குக் காரணம் என்றும் ஏற்படுகிறது.

உதாரணமாக ஒன்று இரண்டு பதங்களை எடுத்துப் பரிசிலனை செய்வாம்:—

கோடு = வளைவு

இந்த ஒரு முதனிலையினின்றும் எவ்வளவு பதங்கள் எவ்வளவு அழகாக ஏற்பட்டுள்ளன என்று பாருங்கள்.

முதனிலை = பகுதி — தாது — Root = அடி கொடுமை = அநீதம் (நீதியினின்றும் வளைந்தது), கொடுங்கோல் — நேர் கோலினின்றும் வளைந்தது கொடுவாள் — வளைந்த வாள் கொடுகு = வளைந்த "கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்"

(சம்பந்தர்)

தெலுங்கில் குடைக்கு வழங்குகிறார்கள்

கொடுக்கு = தேள் கொடுக்கு — வளைவானது,
கொடுமரம் = வில் — வளைந்தது
கொடுநுகம் = மகநாள் — முடநுகம். வளைவானது
கொடுங்கை = உள் வளைந்த கை
கொடுங்கு = வளைவு — உள் வளைவு
கொடுப்பு = கதுப்பு — உள் வளைவுள்ளது
கொடுக்கைப் புளி — வளைவான புளி
கொடி = 1, காகம் — வளைந்து அதாவது சாய்ந்து பார்க்கும் பட்சி

2, வளைந்து வளைந்து படர்வது.

———0———

கால் — கூர்மை.

————

காலம் = தூண்டிமுள் — கூர்மையான முள்
கற்றாழை = கூரியமுள்ளுடையது
காறு = கால் + து = கொழு — கூரியமுனையை உடையது
கலம் = படைக்கலம் — கூரிய ஆயுதம்
கலி = அம்பு — கூர்மையானது
கலினம் = கூரியமுட் கடிவாளம்
கலிகம் = முள்ளுள்ள வன்னிமரம்
களம் = கூரிய ஆயுதங்களால் போர் செய்யும் இடம்
களகம் = படைபயிலும் இடம்

{ N. B. இது கழகம் ஆகாது ; கழகம் என்பது கல்லகம் என்பதன் திரிபு. }

கடம் = உளி — கூரியது

கடப்பாரை = கூரிய முனையுடைய திண்ணிய ஆயுதம்

கடாரி = கூர்மையான ஆயுதம்

கள்ளி = முள் செடி

காரை = — Do —

காரி = கண்டங்கத்திரி — முள்ளுள்ளது

கழு = கழு — கூரிய முனையையுடைய கோல்

கழுகு = கூரிய மூக்குடையது

---

இப்படியே முதனிலைகளை ஒருவன் அறிந்து கொள்ளுவான் ஆனால் மொழி எவ்வளவு எளிதாக இருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். எளிமையும் இனிமையும் இருப்பதனாலேயே தான் இம் மொழியானது உலகந்தோன்றின நாள் முதல் இது காறும் நின்று நிலவுகிறது. இச் சிறப்புக்கள் இல்லாவிட்டால் மற்ற மொழிகளைப் போல் அன்றே இறந்து பட்டிருக்கும். இக் குறிப்பு ஒன்றினாலேயே தமிழ் மொழியானது எளிமையும் இனிமையும் வாய்ந்தது என்று விளங்குகிறது.

தற்காலம் பிள்ளைகள் எல்லாரும் இளவயதிலிருந்தே ஆங்கிலம் கற்க ஆரம்பித்து 20 — 24 வயது வரை படிக்கிறார்கள் ஏறக்குறைய 20 வருடங்கள் செலவழிக்கிறார்கள்.

அப்படிச் செலவழித்தும் புலமை அடைவதில்லை. இலக்கணப் பிழை இல்லாமல் எழுதவும் பேசவும்கூட அவர்களால் முடிகிறதில்லை. இதனால் என்ன ஏற்படுகிறதென்றால் ஒருவன் தன் தாய்மொழியைத் தவிர்த்து மற்ற மொழிகளைக் கற்றால் வருத்தம் அதிகம் ஏற்படுகிறதேயொழிய பயன் ஏற்படுவதில்லை என்று தெரிகிறது.

வயற்றுப்பிழைப்பைக் கருதி அவ்வளவு வருத்தத்தை மேற்கொள்ளுகிறார்களே ஒழிய வேறின்று.

இறந்துபட்ட மொழிகளாகிய இலத்தீன் கிரீக்—ஆரியம் முதலியனவும் அப்படியே

ஹிந்தி என்னும் மொழியும் அவைகளுக்குத் துணைப் போனதே.

ஒருவன் தன் தாய் மொழியைக் கற்பான் ஆனால் மற்ற மொழிகளுக்காகச் செலவழிக்கும் நாட்களில் பாதிபோதும். 10 வருடங்களில் பண்டிதன் ஆகலாம். பிறமொழிகளைப் பின் எளிதாய்க் கற்கலாம்.

“ பீரம்பேணி பாரந் தாங்கும் ” என்றபடி தாய்ப்பாலுண்ட குழந்தைதான் வலுப்பெற்றிருக்கும். அதுபோல், தாய்மொழியில் யார் புலமை அடைந்துள்ளார்களோ அவர்களே ஆரியம் முதலிய இறந்துபட்ட மொழிகளையும் பிறவழங்கும் மொழிகளையும் கற்று ஆராய வன்மை வாய்ந்தவர்கள் உதாரணமாக:— தாகூர் — காந்தி—திலகர்—கோகலே முதலியவர்களைப் பாருங்கள்.

ஆகையால், ஒவ்வொருவரும் நம் தாய்மொழியிலேயே எல்லாக் கலைகளையும் கற்கவேண்டும். பண்டிதர்களும் உபாத்தியார்களும் இதற்கு வேண்டிய உதவியைப் புரியவேண்டும். தமிழ் மொழியின் முதனிலைகள் ஆங்கிலத்தில் சென்று வழங்குவதை அடியிற் காண்பீர்களாக:—

| | | | |
|---|---|---|---|
| அம்பி | — Impe | தின்னல் | — Dinner |
| அந்த | — Yond | தையல்காரன் | — Tailor |
| அம்மா | — Mamma | துருவு | — Through |
| அப்பா | — Pappa | தொங்கு | — Hung |
| அருவி | — River | தோள் } | — Shoulder |
| இடு | — Hit | சோள் } | |
| உருள் | — Roll | தாக்கு | — Touch |
| உருட்டு | — Rotate | தூக்கு | — Take |
| உருண்டை | — Round | பிரி(க்கிறது) | — Break |
| எட்டு | — Eight | புருவம் | — Brove |
| எழும்பு | — Life | பேச்சு | — Speach |
| எழுப்பு | — Lift | பறவை | — Bird |
| ஒற்றுமை | — Unity | படு | — Bed |
| ஒன்று | — One | பையல் | — Boy |
| ஓரை | — Hour | பறி | — Bury |
| ஓதுக்கு | — Oost | | |
| | — | வாடு | — Fade |
| கண் | — Ken | வீண் | — Vain |
| கக்கூஸ் | — Cac-kus | வழி (வயி) | — Way |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொல் | — | Kill-quell | வார்த்தை | — | Word |
| கால் | — | Gale | வேகம் | — | Vigow |
| கல் | — | Cull | வீரியம் | — | Virulence |
| கடவுள் | — | God | மேடு | — | Mount |
| கூடும் | — | Could | மூக்கு | — | (Nook N & M are in terchangeable like நொண்டி & Mondi) |
| கவர் | — | Cover | | | |
| கிறுக்கு | — | Crack | | | |
| கது } குத்து } | — | Cut | மரித்தல் | — | Murder |
| கரை | — | Cry | மன் | — | Man |
| சிரி | — | Jeer | மனது | — | Mind |
| சிட்டு | — | Chit | நிட்டை | — | Night |
| சாரம் | — | Syrup | நரம்பு | — | Nerve |
| சந்தி | — | Shunt | நினை | — | Know |
| சாத்து | — | Shut | | | |
| தின் | — | Dine | | | |

| தமிழ். | கன்னடம். |
|---|---|
| பணம் | ... அணு (முதல் ஒற்று தீர்க்கம்). |
| பால் | ... ஆல் ,, |
| வந்து | ... பந்து (வகாரம் பகரமாயிற்று) |
| உள்ளே | — ஒளக |
| போய் | ... ஓகி |
| எடுத்துக்கொண்டுவா | ... தக்கொண்டுபா |
| என் | .... எனே |
| இங்கே | ... இல்லி |
| நீர் | ... நீர் |
| கேள் | ... கேளி |
| ஒன்று | ... ஒந்து |
| இரண்டு | ... இரடு |
| மூன்று | ... மூறு |
| நான்கு | ... நாக்கு |
| ஐந்து | ... ஐது |
| கூப்பிடு | ... கூ |
| மனை | ... மனே |
| அப்பா | ... அப்பன் |
| அம்மா | ... அம்மாள் |

&c. &c.

| தமிழ். | தெலுங்கு. | தமிழ். | தெலுங்கு |
|---|---|---|---|
| செவி | ... செவி | வர | ... ராவே |
| செய்(கை) | ... செய் (கை) | மருந்து | ... மந்து |
| கண் | ... கண்ணு | இல் | ... இல்-இண்டிக்கி |
| மூக்கு | ... முக்கு | பெண்சாதி | ... பெண்ட்லா |
| எங்கே | ... எக்கட | அதனை | ... தானினே |
| இங்கே | ... இக்கட | அவன் | ... வாடு |
| நீர் | ... நீள் | &c. | &c. |

| தமிழ். | | இந்துஸ்தானி |
|---|---|---|
| ஏகம் | ... | ஏக் (ஒன்று) |
| மரி(த்தான்) | ... | மர்யா (மரித்தான்) |
| யாம் | .... | அம் — மை (நான்) |
| சலி | ... | சலாவ் (நட) |
| புலவு | .... | புலவு (இறைச்சி ஆகாரம்) |
| தம் | ... | தும் — தும்கு (உனக்கு) |
| கரு | ... | கரோ (செய்) |
| பரவா இல்லை | ... | பர்வா நை (ந = இல்லை) |
| ந | ... | நை (இல்லை) |
| தியாகி—தியாகு | ... | தியா (கொடு) |
| அந்தகன் | ... | அந்தே (குருட்டு) |
| இரு | ... | ரஓ — ரஇ — எழுத்து நிலைமாறி வந்திருக்கிறது (இரு) |
| சும்மா | ... | சுப் |
| பலு (பலுக்கு) | ... | போல் (சொல்) |
| மார் | ... | (புளியம்மார்— அடிப்பதற்கு உதவும்) மார் மாரோ (அடி) |
| மேல் மே | ... | (ஏழாம் வேற்றுமை உருபு) மே (இல்) |
| அட்டம் அட் | ... | ஆட் (எட்டு) |
| சாரம் | ... | சிரப்—ஷராப் (மது) |
| நாமம் | ... | நாம் (பெயர்) |
| வா | ... | ஆவ் (வா) |
| பில்லி | ... | பில்லி (பூனை) |
| கர்மம் | ... | காம் (வேலை) |
| அதா(ன்று) | ... | ஐதோ (ஆனாலும்) |

| | | |
|---|---|---|
| இ | ... | இதர் (இங்கே) |
| அப்பா | ... | பாப் (அய்யா) |
| அம்மா | ... | மாஹி (அம்மா) |

இதே மாதிரி மற்ற பாஷைகளிலும் தமிழ் முதனிலைகள் சென்றிருப்பதை சமயம் வாய்த்துழிக் கூறுவாம்.

இதனாலேயே தமிழ்மொழி ஆதி பாஷை என்றும் அதனி னின்றும் மற்ற பாஷைகள் பிரியும்போது தமிழ் முதனிலைகளை வேண்டியவாறு எடுத்துக்கொண்டு பின் வழக்காற்றுக்குக்கொண்டு வந்திருக்கின்றன என்றும் அறிகிறோம்.

ஒருவன் தமிழ் முதனிலைகளைச் சரிவரக்கற்றுக் கொள் வானே யானால் மற்றப்பாஷைகளைச் சுளுவாகக்கற்றுக்கொள்ள லாம் என்று இதனால் ஏற்படுகிறது. தமிழ்ப்பாஷை எளிதாய் இருப்பதுடன் மற்றப்பாஷைகளைக் கற்றுக்கொள்ள எளிதான வழியையும் கற்பிக்கிறது.

காய்தல் உவத்தலின்றி மொழிகளை ஆராயும் பண்டிதர்கள் அனைவரும் தமிழைப்போல எளிதாகவும் முறையாகவும் அமைந்த பாஷை வேறேகிடையாது என்று ஒரு முகமாகக் கூறுவதை நோக்கத்தமிழ்மொழி மிகவும் எளிமையையுடையது என்று தெளிவாக விளங்கும்.

இவ்வளவு இனிமையான பாஷை இருக்க இதனைவிட்டு வேறு பாஷைகளில் நாட்களைப்போக்குவது

"கரும்பிருக்க இரும்புகடித் தேய்த்தவாறே" ஆகும்.

ஆகையால், தமிழ்மொழியானது மிகவும் எளிமைவாய்ந்த தென்றும், எல்லா மொழியாளர்களும் பின்பற்றக்கூடிய முதனிலைகளை யுடையதென்றும் எல்லா மொழியாளர்களும் முத லில் தமிழையே பின்பற்றவேண்டுமென்றும் பிறகு மற்ற பாஷை களைக் கற்கவேண்டுமென்றும் கூறினர்.

## 6. எழுத்துண்மை.

தொன்மை, இனிமை, இயற்கை அமைப்பு, இலக்கண வரம்பு, எளிமை, முதலிய சிறப்புகளுடன் தமிழுக்கு இன் னொரு முக்கியமான சிறப்பு உண்டு. அதுதான் எழுத்துண்மை.

பிறமொழியாளர்கள் தங்கள் மொழிகளுக்கு எழுத்துக்கள் கற்பிப்பதன் முன்னம், தமிழர் எழுதத்தெரிந்தவர்களா யிருந்தனர்.

இன்ன காலத்தில் தான் தமிழ் மொழிக்கு எழுத்துக்கள் ஏற்பட்டதென்று கணித்தற்கு கூடாமையா இருக்கிறது. பார்க்குமிடத்து மொழி ஏற்பட்டபோதே வடிவமும் உடன் தோன்றியதாக ஏற்படுகிறது.

இதனை நோக்கியே, அவஞானம்போக்கும் சிவஞான முனிவர்

"தெய்வச்சுருதி தமிழ் ஒன்றே தீட்டும் பெருமைத்து"

எனத் தேற்றேகாரத்துடன் தமது அமுதாம்பிகை பிள்ளைத் தமிழில் கூறினர்.

மற்ற மொழிகளுக்கு இந்த விதமான தீட்டும் (எழுதும்) பெருமை உடனுக்குடனே இருந்ததில்லை. பல ஆண்டுகள் சென்ற பின்னர் எழுத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இன்னும் பல பாஷைகளுக்கு எழுத்துக்கள் கிடையா உதாரணமாக:—

சமஸ்கிருதம் — துளு — கொங்கணம் — குடகு – தோட முதலியன.

சமஸ்கிருதத்திற்கு எழுத்துக்கள் உண்டு என்று பலர் கூறுவர். அவர் எல்லாம் சரித்திரம் அறியாதவரே.

சமஸ்கிருதத்திற்கு இரண்டுவிதமான எழுத்துக்கள் நடைமுறையில் உள்ளன.

ஒன்று கிரந்தம் – மற்றொன்று நாகரம். கிரந்தம், தமிழெழுத்துக்களின் திரிபு. நாகரம் — மராட்டி எழுத்துக்களின் திரிபு. தனக்கென ஒன்றும் இல்லாதது அதனாலே தான் சமஸ்கிருத ஒத்துக்களுக்கு "எழுதாமறை" என்றபேர்.

இதனை அறிந்தே நம் சேக்கிழார் "எழுதும் மறை" தமிழ் என்றும், எழுதாமறை ஆரியம் என்றும் கூறுவாராயினர்.

மேலும், எழுத்துக்களுக்கெல்லாம் பிறப்பிடம் பிரணவம் பிரணவத்திற்கு "மூல எழுத்து" என்றபேர் ஏனென்றால் மற்ற எழுத்துக்கள் எல்லாம் அதனின்றும் முளைத்து எழுகின்றன வாதலால் எழுத்துக்களுக்கெல்லாம் ஆணிவேரைப் போன்று இருப்பதால் பிரணவத்திற்கு "எழுத்தாணி" என்று பேர்.

அத்தகைய பிரணவத்தின் வரிவடிவம் ஓ என்பதே இந்த வடிவம் தமிழே.

வேறு பாஷைகளில் கிடையாது உபநிஷத்துக்களும் பிரணவம் தமிழ் ஓ வடிவிலேயே தான் வரையப்படவேண்டுமென்று அனுமதியிடுகின்றன. (Vide சிவஞானபோத முதனூல் விளக்கம்.)

ஒடுக்க நிலையிலும் பிரணவம் நாததத்துவத்தில் ஓங்கார வடிவமாகச் சுழன்று கொண்டிருக்கிறது.

ஓ என்ற எழுத்து பிரியும் விதமும் அதனினின்றும் மற்றய எழுக்கள் பிறக்கும் விதமும் மேலே காட்டினும்.

பிரணவம் தமிழ் என்பதற்கு "கொன்றைச் சடையற்கு ஒன்றைத்தெரியக் கொஞ்சித் தமிழாற் பகர்வோனே" என்றும் திருப்புகழால் அறியலாம்.

எல்லாமொழிகளுக்கும், எல்லா எழுத்துக்களுக்கும் ஆதியாயுள்ள பிரணவம் தமிழாயிருக்கும்போது தமிழ்மொழி ஆதிமொழி என்றும், தமிழ்மொழிக்கு அனாதியே வரிவடிவம் உண்டு என்றும், வரிவடிவம் நடுவில் ஏற்பட்டது அல்லவென்றும் கூறுவதில் பழுது ஒன்றும் இல்லை.

ஆனால், சில எழுத்துக்கள் காலாந்தரங்களில் வடிவங்கள் மாறுபட்டுள்ளன. இந்த வடிவம் மாறுபட்டதே யொழிய இல்லாதவடிவம் புதிதாக ஏற்படவில்லை. ஆகையால், எப்போதும் எழுத்துண்மைபெறப்பட்டது.

தமிழ்மொழிக்கு இது வரையில் நான்கு தடவைகளில் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

(1) உருவ எழுத்துக் காலம்
(2) கோல் எழுத்துக் காலம்
(3) வட்ட எழுத்துக் காலம்
(4) சதுர எழுத்துக் காலம்

உருவ எழுத்துக்காலத்தில் தான் — சீன — ஈகிப்து முதலிய பாஷைகள் பிரிந்தன.

கோல் எழுத்துக்காலத்தில்தான் மாராட்டி — பாலி அரவ (அரபி முதலிய பாஷைகள் பிரிந்தன.)

வட்ட எழுத்துக் காலத்தில்தான் — தெலுங்கு — கன்னடம் துளு, மலையாளம் முதலிய பாஷைகள் பிரிந்தன.

தற்காலம் நடப்பது சதுர எழுத்துக்காலம்.

ஆகையால், தமிழ்மொழி தோன்றும்போதே உடன் தோன்றியது எழுத்து என்றும், எழுத்துக்கள் இது வரை நான்குவித மாறுபாட்டை அடைந்திருக்கின்றன என்றும், தமிழ் எழுத்துக்களினின்றுமே மற்றப் பாஷைகள் பிரிந்து தங்களுக்கு எழுத்துக்களை ஏற்படுத்திக்கொண்டன என்றும் கூறியதாகும்.

## 6. மந்திரசக்தி.

தமிழ்மொழி தொன்மை – இனிமை – இயற்கை அமைவு – இலக்கணவரம்பு — எளிமை – எழுத்துண்மை முதலிய சிறப்புக்களைப்பெற்றிருப்பதைப்போலவே மந்திரசத்தி என்பதையும் சிறப்பாகத் தன்னிடம் கொண்டிருக்கிறது.

தமிழ் நாடு ஒன்றைத் தவிர மற்ற நாடுகளில் மந்திரங்கள் அந்தந்த நாட்டுப்பாஷையில் நடைபெறுகின்றன. தமிழ்நாட்டில் மாத்திரம் இறந்துபட்ட மொழியாகிய ஆரியத்தில் நடைபெறுகின்றன.

ஆரியம், தமிழ்நாட்டிற்கு வருமுன் மந்திரங்கள் எம்மொழியில் நடைபெற்றன? தமிழிலேதான்.

வியாசர்காலம் இற்றைக்கு 5000 வருடங்கள் ஆகின்றன. அவர்காலத்துக்கு அப்புறம்தான் தமிழ்நாட்டில் வடமொழியாகியே ஆரியம் பரவத்தலைப்பட்டன. அரசர்கள் எல்லாம் ஆரிய மதமாகிய பிராமணமதத்தைக் கைக்கொண்டு கோவில்களிலும் மற்றக் கிரியைகளிலும் ஆரிய மந்திரங்களை நுழைத்துவிட்டார்கள். தமிழ் மந்திரங்களை மொழிபெயர்த்துக் கூறுவார் ஆயினர்.

வடமொழி மந்திரங்களைப் பயின்றபோது அம்மந்திரங்களின் பொருள் தமிழருக்கு விளங்கவில்லை. ஆகையால், அப்பொருள் தெரிந்த ஒருவனை அம்மந்திரங்களைக்கூற வைத்துக்கொண்டு அவன் முதலில் சொல்ல தாங்கள் பின்னால் கூறிவந்தார்

கள். இருக்க இருக்க சொல்லிவைப்பவனும் தமிழரைப்போல வே பொருள் தெரியாதவனுய்விட்டான். அது முதல் இருதிறத்தாருக்கும் மந்திரங்களின் பொருள் விளங்காமற்போயிற்று.

சொல்லுபவன் மந்திரங்களின் (Suggestions) பொருளை அறிந்து அதற்குரிய முத்திரைகளுடன் (=Passes) கூறுவானே ஆனல் அம்மந்திரங்களின் பலனை அடைகிறான்.

"நிறைமொழிமாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழிதானே மந்திரமென்ப"

என்ற தொல்காப்பியச் சூத்திரப்படி நிறைந்த மொழியையுடைய மாந்தருடைய ஆணையில் பிறந்த மறைமொழி மந்திரமாகும்.

மந்திரங்கள் வடமொழியில் தான் இருக்கவேண்டுமென்று தொல்காப்பியர் கூறவில்லை. அந்தந்த நாட்டுமொழிகளில் கூறினல் தான் பலன் உண்டு. பொருள் தெரியாத மொழியில் ஒருவன் மந்திரங்களை உச்சரிப்பான் ஆனல் அது சலமின்றிச் சந்துரைப்பதுபோலாம்.

மந்திரங்களின் பலன் சொல்லுபவனுடைய மனத்திட்டத்தைப்பொருத்து இருககிறது.

ஆரியர்கள் தமிழ் நாட்டிற்கு வருவதன் முன்னமும் வந்த பின்னர் சில காலமும் தமிழர் தமிழ் மந்திரங்களையே உபயோகித்தார்கள். இப்போதும் சிலர் தமிழ் மந்திரங்களை உபயோகிக்கிருர்கள்.

தமிழில் மந்திரங்கள் என்னென்ன வேலைகள் செய்திருக்கின்றன வென்று பாருங்கள்:—

ஔவையார் சோன்ன பனந்துண்டங்களைப் பழந்தரச்செய்த
**ம ந் தி ர ம்.**

1. திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின்ருர் மணப்பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்று பச்சோலை சலசலக்க
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தரவேண்டும் பனந்துண்டமே.

ஔவையார் துறைபட்ட பலாத்தழைக்கப்பாடிய மந்திரம்.

2. கூரிய வாளாற் குறைபட்ட கூன்பலா
ஓரிலையாய்க் கொம்பாய் உயர்மரமாய்ச்—சீரியதோர்
வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த் தின்பழமாய்ப்
பண்டுபோ னிற்கப் பலா.

### ஔவையார் மழைபெய்யப்பாடிய மந்திரம்.

3. கருணையாலிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையான் கோவல்—திருமணத்தில்
முன்மாரி பெய்யுமுது வாரியை மாற்றிப்
மொன்மாரி யாகப் பொழி.

### ஔவையார் பிசாசுகளை விரட்டப்பாடிய மந்திரங்கள்.

4. வெண்பா இருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையா லெழுதானைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

5. கருங்குளவி சூரைத்தூரீச் சங்கனிபோல்
வருந்தினர்க் கொன்றீயாதான் வாழ்க்கை—அரும்பகலே
இச்சித்திருந்த பொருள் தாயத்தார் கொள்வரே
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

6. வான முளதால் மழையுளதால் மண்ணுலகில்
தானமுளதால் தடமுளதால்—ஆனபொழுது
எய்த்தோ மிளைத்தோமென் றேமாந் திருப்பாரை
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

7. எண்ணா யிரத்தாண்டு நீரிற் கிடந்தாலும்
உண்ணீரம் பற்றுக் கிடையேபோல்—பெண்ணாவாள்
பொற்றொடி மாதர் புகழறல் கொள்ளாரை
எற்றோமற் றெற்றொமற் றெற்று.

### நக்கீரர் குயக்கோண்டானைச்சாகவும் பிழைக்கவும் பாடிய மந்திரம்.

8. முரனில் பொதியில் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—அரணிலா
ஆனந்த வேட்கையின் வேட்கோக் குயக்கொண்டார்
ஆனந்தம் சேர்க சுவாகா.

9. ஆரியநன்று தமிழ்தீது என்று உரைத்த
காரியத்தால் காலக்கோட் பட்டானை—சீரிய
அந்தன்பொதியில் அகத்தியனார் ஆணையில்
செந்தமிழே தீர்க்க சுவாகா.

**ஸ்ரீஞானசம்மந்தசுவாமிகள் எலும்பைப் பெண்ணுச்செய்யப்பாடியமந்திரம்**

10. மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சர மமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல் கணத்தார்க்
அட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்.

என்பது முதல் 10 பாட்டுகள்

இப்படியே இவர் பாடிய தேவாரங்கள் அனைத்தும் மந்திரப் பாட்டுக்களாகும். ஆண்டுக் கண்டுகொள்க:—

**ஸ்ரீநாவுக்கரசு சுவாமிகள் நீற்றறையைக் குளிரச்செய்த மந்திரம்.**

11. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

முதலிய 10 பாட்டுக்கள்

இப்படியே இவர் பாடிய தேவாரங்கள் அனைத்தும் மந்திரப் பாட்டுக்களாகும் ஆண்டுக் கண்டுகொள்க:—

**சுந்தரமூர்த்திகள் முதலைவாயினின்றும்**
**பிள்ளையை அழைக்கப்பாடிய மந்திரம்.**

12. எற்றான் மறக்கே னெழுமைக்கு மெம்பெருமானையே
உற்றாயென் றுன்னையே யுள்குகின்றே னுணர்ந் துள்ளத்தால்
புற்றாடரவா புக்கொளியூர் அவிநாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே.

முதலிய 10 பாட்டுக்களுமாகும்.

இப்படியே இவர் பாடிய தேவாரங்கள் அனைத்தும் மந்திரப் பாட்டுக்களாம். ஆண்டுக் கண்டுகொள்க.

இன்னும் கம்பர் சிறுவயதாயிருக்கும்போது உபாத்தியாயருடைய கம்புக் கொல்லையைக் காவல்காத்துக் கொண்டிருக்கையில் காளிங்கராயனுடைய பட்டத்துக் குதிரையை மாளவும் மீளவும் பாடிய மந்திரம் தமிழே.

இன்னணம் தமிழ் நாட்டுப் பெரியோர்கள் தமிழ் மந்திரங்களை ஓதிச்செய்து காட்டிய அற்புதங்களைக் கூறப்புகின் அளவிடற்கரியதொன்றாம்.

இதனுனே தமிழுக்கு இருக்கும் மந்திரசத்தி தேற்றேன விளங்கும்.

இவ்வளவு சத்தி தமிழுக்கு இருப்பதை நம் தமிழ் நாட்டுப் பெரியோர்கள் நடைமுறையில் காட்டியும் தமிழருக்கு உணர்வு தோன்றவில்லை என்ருல் யாரை நோவது? இனி மேலாகிலும் தமிழ் நாட்டார் தமிழ் மந்திர முறையைக் கைக்கொள்ளுவாராக.

"குளிக்கப்போய் சேறு பூசிக்கொள்ளுவதைப்போல" தமிழர்கள் வடமொழி மந்திரங்களைக்கூறிப் பயனைப்பெருது போவதுடன் பாவத்தையும் மூட்டைகட்டிக் கொள்ளுகிருர்கள்.

தமிழில் எந்த விடயத்துக்கு மந்திரமில்லை? ஒருவன் கந்தரனுபூதியை எடுத்துக்கொண்டால் எல்லா விடயங்களுக்கும் மந்திரப்பாக்கள் இருக்கின்றன. அதுவும் போருவிட்டால் தேவாரங்கள் இருக்கின்றன. தேவாரப் பதிகங்களின் ஈற்றில் அப்பதிகங்களை ஓதினுல் இன்னின்ன பலனைத்தரும் என்று முத்திரையிட்டிருப்பதைக் கவனித்தால் போறும். எந்த விடயத்துக்கு எந்தத் தேவாரத்தை ஓதவேண்டுமென்று தெரிந்து கொள்ளலாம். அதன்படி பயனையும்பெறலாம்.

அதுவும் போருதென்ருல் திருமூலருடைய "மந்திரம் மூந்நூறு" என்ற நூலைப்பார்க்கவும். அதில் எல்லாவித மந்திரங்களும் அடங்கிக்கிடக்கின்றன.

தமிழ் நாட்டாருக்குத் தமிழ் மொழியிலேயே தமிழ் நாட்டுப் பெரியோர்கள் மந்திரங்களை வெளியிட்டிருக்க அவைகளைவிட்டு வடமொழி மந்திரங்களை இச்சித்தல் அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டதொக்கும்.

இதுகாறும் கூறியவாற்ருல் தமிழ்மொழிக்குத்தான் மற்ற மொழிகளைக்காட்டிலும் மந்திரசத்தி அதிகம் உண்டென்றும், தமிழ் நாட்டில் உள்ளோர் அந்நாட்டு மொழியாகிய தமிழிலேயே தான் மந்திரங்களை உச்சரிக்கவேண்டுமென்றும், பொருள் தெரியாத ஒரு மொழியில் மந்திரங்களைக் கூறுவது பித்துப் பிடித்தவன் காரியம் என்றும், வடமொழி மந்திரப்பழக்கம் இடைநடுவில் ஏற்பட்டதால் அப்பழக்கத்தை அறவே ஒழித்துப் பழயமாதிரி தமிழ் மந்திரங்களையே ஒவ்வொருவரும் கைக்கொள்ளவேண்டுமென்றும், சமயாசாரிகளும், புலவர்களும் பெரியோர்களும் அம்மாதிரி வழக்கத்தை நமக்கு நடத்திக் காண்பித்துப்போயிருக்கிருர்களென்றும் ஆகையால் அவர்களைப் பின்பற்றி நடப்பதே தகுதி என்றும் கூறினும்.

வடமொழி மந்திரங்களிலேயே பயின்றிருந்த உமாபதிசிவம் அம்மந்திரங்களை அறவே மறந்துவிட்டு, தமிழ் மந்திரங்களைக் கற்றுப் பின் சிறப்படைந்தார் என்பது உலகப்பிரசித்தம்.

கொடிக்கவியாகிய தமிழ் மந்திரத்தைக்கொண்டு தான் அவர் சிதம்பரத்தில்நடராசப்பெருமானுடையகொடியைகொடிமரத்தில் ஏறம்படிசெய்தார். இது ஒன்றே தமிழ் நாட்டாருக்கு எடுத்துக் காட்டு ஆகும்.

இச்சூழ்ச்சியை உணர்ந்து தமிழ் நாட்டார் இனிமேலாகிலும் தமிழ் மந்திரங்களை வழக்கத்தில் கொண்டுவந்து தமிழ் மொழியை உள்ளன்போடு ஆதரிப்பார்களென்று எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றோம்.

## முடிவுரை.

தமிழ் மொழிக்கு மற்ற எல்லாச் சிறப்புக்களைவிட மந்திர சத்தி ஒரு ஒப்பற்ற சிறப்பாகும்.

இவ்வெழுவகைச் சிறப்புக்களைத் தவிர்த்து தமிழ்மொழி இன்னும்பல சிறப்புக்களைத்தன்னிடம்கொண்டது. எல்லாவற்றையும் கூறப் புகின் காலம் நீட்டிக்கும். ஆகையால் இத்துடன் நிறுத்தி அருத்தாபத்தி நியாயத்தால் சொல்லாமல்விட்ட சிறப்புக்களையும் இதனை வாசிப்பவர் கூட்டித்தெரிந்துகொள்ளுவார்களாக.

இத்தகைய பல சிறப்புக்கள்வாய்ந்த அமிழ்தினு மினிய தமிழ்மொழியை தமிழராவார் புறக்கணியாமல் ஆங்காங்கே கழகங்கள் அமைத்து தமிழைப்போற்றுவதுடன் ஒவ்வொரு ஜில்லாவின் தலைநகரிலும் ஆராய்ச்சிக்கழகம் ஒன்று தாபித்து மற்றக் கழகங்களை அதற்கு அங்கங்களாக அமைத்து தமிழ் நூல்களை ஆராய்ந்து வரவேண்டும். தனித்தமிழ் நூல்களையும் தனித்தமிழ் ஆசாரங்களையும் வெளியிடவேண்டும்.

தாங்கள் இன்னாரென்று தெரியாத தமிழருக்கு தமிழருடைய சரித்திரத்தையும் தமிழின் பூர்வீகநிலைமையையும்கற்பிக்க வேண்டும்; ஆராய்ச்சிவல்லுநர்களை அடிக்கடி கழகத்துக்கு வரவழைத்து விரிவுரைகள் நிகழ்த்தவேண்டும்; ஆராய்ச்சிக்கழகத்திலும் மற்றக்கழகங்களிலும் தமிழ் நாட்டில் தமிழ் நன்றாய்ப் படித்த தமிழ்ச் சமயமாகிய சைவத்தைக் கைக்கொண்ட பிறமத ஆசாரங்களைக்கைக்கொள்ளாத, தமிழையும் அங்கிலமும் மற்றப் பாழைகளும் வல்ல ஒருவனை ஆசிரியனாக ஏற்பாடுசெய்ய வேண்டும். இவைகளை எல்லாம் செய்யத் தமிழருக்கு மன உறுதியை இறைவன் அளிப்பானாக.

கருணாநிதிபால்
விஜயபுரம்.
35vds